தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணை பரீட்சை - 2022

# Conducted by Field Work Centre, Thondaimanaru

## 1st Term Examination - 2022

FWC

| | | |
|---|---|---|
| வணிகக்கல்வி - I<br>Business Studies - I | Three Hours<br>Gr. 12 (2023) | 32 T I |

சுட்டெண் :..............................

**அறிவுறுத்தல்கள் :-**

- எல்லா வினாக்களுக்கும் இத்தாழிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

01. மனித தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்திசெய்வதற்கு.
 1. பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.
 2. சேவைகள் பயன்படுத்தப்படுகின்றன
 3. பொருட்களும், சேவைகளும் பயன்படுத்தப்படுகின்றன
 4. துனைச் சேவைகள் பயன்படுத்தப்படுகின்றன
 5. அருமையான வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன (.......)

02. சுரங்மறுத்தலும், கனிய அகழ்வும், உற்பத்திக் கைத்தொழில், நிர்மாணக் கைத்தொழில், மின்சாரம், வாயு, வெப்பம் மற்றும் குளிரூட்டல், வழங்கல் என்பன உள்ளடங்கும் உற்பத்திக்கு வழங்கும் பெயர் யாது?
 1. விவசாய உற்பத்தி
 2. கைத்தொழில் உற்பத்தி
 3. முதன்னிலை உற்பத்தி
 4. இரண்டாம் நிலை உற்பத்தி
 5. மூன்றாம் நிலை உற்பத்தி (.......)

03. வணிகம் அடிப்படையில் பிரிக்கப்படும் முறை தொடர்பில் ஐந்து மாணவர்களின் கூற்றுக்கள் வருமாறு
 A- வியாபாரமும், வணிகச்சேவைகளும்
 B- கைத்தொழிலும், வர்த்தகமும்
 C- கைத்தொழிலும், வியாபாரமும்
 D- கைத்தொழிலும், வணிகச்சேவைகளும்
 E- வியாபாரமும், வர்த்தகமும்

 மேலே கூறப்பட்ட கூற்றுக்களில் சரியான வணிக அடிப்படையிலான எடுத்துக்கூறிய மாணவன் யார்?

 1. A 2. B 3. C 4. D 5. E (.......)



kalvi.lk

04. வணிகக் கருமங்கள் சில X நிரலிலும், அவற்றிற்குப் பொருத்தமான உதாரணங்கள் Y நிரலிலும் தரப்படுகின்றன.

| X | Y |
|---|---|
| 1. நிர்வாகம்<br>2. உற்பத்தி<br>3. சந்தைப்படுத்தல்<br>4. நிதி<br>5. மனித வளம் | A- தரகட்டுப்பாடு<br>B- விளம்பரம்<br>C- ஊழியர் கோவைகள் தயாரித்தல்<br>D- ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல்<br>E- மூலதனத்தை ஈடுபடுத்தல் |

X நிரலில் காட்டப்பட்டுள்ள வணிகக்கருமங்களுக்குப் பொருத்தமான Yநிரலில் உள்ள உதாரணங்களை சரியான ஒழுங்கு முறையில் எடுத்துக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1. A, C, D, E, B,   2. B, C, A, E, D   3.C, A, B, D, E
4. C, A, B, E, D   5. D, A, E, B, C   (…….)

05. கூற்று A- வியாபாரமும் துணை நிலைச்சேவைகளும் இணையும் போது, அது வர்த்தகமாக கருதப்படுவதுண்டு.

கூற்று B- வர்த்தகத்திற்கு சமமானதாக மூன்றாம் நிலை உற்பத்தியினை கருதமுடிவதுண்டு.
மேலே தரப்பட்ட இரண்டு கூற்றுக்களிலும்

1) இரண்டு கூற்றுக்களுமே தவறானவை
2) கூற்று A சரியானது, கூற்று B தவறானது
3) கூற்று A தவறானது, கூற்று B சரியானது
4) இரண்டு கூற்றுக்களுக்கிடையில் தொடர்பு ஏதும் இல்லை
5) A யும் B யும் சரியானது என்பதுடன் B யினூடாக A விபரிக்கப்படுகின்றது.   (…….)

Education கல்வி அධ්‍යාපන

06. மாற்றமுறும் தற்போதைய வணிகச்சூழல் நிலைமைகள் தொடர்பில் ஐந்து மாணவர்களின் கூற்றுக்கள் வருமாறு

L – பொதுவாக சனத்தொகையில் 60 வயதிற்கு மேற்பட்டோர் யாவருமே Covid தடுப்பூசியினை பெறுதல் காட்டயமானதாகும்.

M – தற்போதைய கோவிற் தொற்றுக்காலங்களில் இணையவலையமைப்பு சேவைகள் பாரியளவில் விருத்தியடைந்து செல்கின்றன

N – தற்போது Covid தொற்று நிலைமை கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக ஆலயத்திருவிழாக்கள் மற்றும் சமூகமட்ட நிகழ்வுகள் யாவற்றுக்கும் தடைகள் தளர்த்தப்பட்டுள்ளன.

O – தற்போதை Covid தொற்று நிலைமை காரணமாக வழங்குனர்கள் மூலம் பொருட்களை வழங்காது விடுவதனால் உற்பத்திகள் பல தடைப்பட்டுள்ளன.

P – கடந்த சில மாதங்களாக பொருட்கள் மற்றும் சேவைகள் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து சென்றுள்ளன.

மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் பேரண்ட சூழலுடன் தொடர்புடைய கூற்றாக கருதப்பட முடியாத கூற்றினை குறிப்பிட்ட மாணவன் யார்?

1. L   2.M   3. N   4. O   5. P   (…….)



kalvi.lk

07. சமூக நலன்புரிச் சேவைகளில் ஈடுபடுவதன் மூலம் வணிகங்கள் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது

1. அரசாங்கத்துக்காகவாகும்
2. சமூகத்திற்காகவாகும்
3. நாட்டுக்காகவாகும்
4. வாடிக்கையாளருக்காகவாகும்
5. உடைமையாளருக்காகவாகும் (…….)

08. வணிகங்களை வெற்றிகரமாக கொண்டு நடாத்துவது தொடர்பில் பல்வேறு வழிகளில் அரசு தலையீடுகளை மேற்கொள்வதுடன் அதன் மூலம் அரசு பல விடயங்களை எதிர்பார்ப்பதும் உண்டு இதன்படி அட்டவனை X இல் அரசு தலையிடும் முறைகளுக்கான உதாரணங்களும் அட்வணை Y இல் அரசு எதிர்பார்க்கும் விடயங்களும் காட்டப்படுகின்றன.

| X | Y |
|---|---|
| A. அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது | 1. சிறந்த தரமான சேவையினை வழங்கல் |
| B. பொருட்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்தல் | 2. பெருமளவு வணிகங்கள் முதலீடுகளை இடுதல் |
| C. ஒத்த வணிகக் கருமங்களில் ஈடுபடல் | 3. தேவையற்ற வணிகம் உள் நுழைவதனை தடுத்தல் |
| D. உற்பத்தி வரி, கம்பனி வரி போன்றவற்றை அறவிடல் | 4. விற்பனை இலாப அளவுகளை ஊக்குவித்தல் |

X க்கும், Yக்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க

1) A-1, B-4, C-2 D-3
2) A-3, B-1, C-4, D-2
3) A-4, B-3, C-2, D-1
4) A-1, B-2, C-3, D-4
5) A-2, B-4, C-1, D-3 (…….)

09. பின்வரும் அட்டவணையானது கழிவு முகாமைத்துவம் தொடர்பான "4R"எண்ணக்கருவையும் அதனுடன் தொடர்புடைய உதாரணங்களையும் எடுத்துகாட்டுகின்றது.

| எண்ணக்கரு | உதாரணங்கள் |
|---|---|
| 1. மீள்சுழற்சி | A. அச்சிடுவதற்கு பதிலாக கடிதங்களை கணணித் திரையில் வாசித்தல் |
| 2. மீள்பதிலீடு | B. சிறு குறிப்புக்களை எழுதுவதற்கு கழிவுக் கடதாசிகளைப் பயன்படுத்துதல் |
| 3. பாவனையைக் குறைத்தல் | C. பாவனையில் இருந்து அகற்றப்பட்ட கைத்தொலைபேசிப்பாகங்களைப்பயன்படுத்தி விளையாட்டு பதக்கங்களை தயாரித்தல் |
| 4. மீள்பாவனை | D. பழங்கள் மற்றும் காய்கறிகளின் கழிவுகளை பயன்படுத்தி சேதனப் பசளை தயாரித்தல் |

மேலே தரப்பட்டுள்ள எண்ணக்கருக்களின் ஒழுங்கு வரிசைக்கு அமைவாக உதாரணங்கள் சரியாக எடுத்துக் காட்டப்பட்டுள்ள தெரிவு யாது?

1) A,D,B,C
2) B,C,A,D
3) B,D,C,A
4) D,C,A,B
5) D,A,C,B (…….)



kalvi.lk

10. நிலை பேண்தகு அபிவிருத்தியின் பிரதான கோபுரங்கள் அட்டவணை x இலும், அவை தொடர்பாக வணிகங்கள் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் அட்டவணை y இலும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A. பொருளாதார நிலை பேண்தகு அபிவிருத்தி<br>B. சூழல் நிலை பேண்தகு அபிவிருத்தி<br>C. சமூக நிலை பேண்தகு அபிவிருத்தி | 1. மனித மூலதனத்தை பராமரித்தல்<br>2. இடர் முகாமைத்துவம்<br>3. பூரண வேலைவாய்ப்பு<br>4. வறுமை நிலையினை இழிவுபடுத்தல்<br>5. உற்பத்தியும் நுகர்வும்<br>6. இயற்கையானதும் கலாச்சார வடிவமைப்புக்களும் |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

1. A-1,4 B- 5,6 C- 2,3
2. A-3,5 B-2,6 C-1,4
3. A-2,3 B-1,5 C-4,6
4. A-4,6 B-3,5 C-1,2
5. A-5,6 B-1,4 C-2,3 (…….)

11. நிறுவனமொன்று நிலையான சொத்தொன்றினை விற்கும் போது அதன் கிரயத்திலும் பார்க்க மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளும் தொகையானது, வரியைக் கணிப்பிடும் போது.

1) இலாபமாக கருதப்படுகின்றது
2) வருவாயாக கருதப்படுகின்றது
3) மூலதன ஒதுக்கமாக கருதப்படுகின்றது
4) வருவாய் ஆதாயமாக கருதப்படுகின்றது
5) மூலதன ஆதாயமாக கருதப்படுகின்றது (…….)

Education கல்வி அධ்‍යාපන

12. நுகர்வோர் உரிமைகள், மற்றும் நுகர்வோர் பொறுப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A- தகவல்களைப் பெறுதல்
B- சமூகம் தொடர்பான கரிசனை
C- தொடர்ச்சியான பங்களிப்பு
D- தெரிவு
E- அடிப்படை தேவைகளை நிறைவு செய்தல்
F- ஒத்துழைப்பு
G- நுகர்வோர் கவ்வி பெறுதல்
H- சூழல் தொடர்பான கவனம்

மேலே உள்ளவற்றில் நுகர்வோர் உரிமைகளை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியினை தெரிவு செய்க.

1. A,D,E,G 2. A, B,E,G 3.B,C,F,H
4.B,C, D,E 5.E,F,G,H (…….)

13. அரசின் இறைக்கொள்கையின் பிரதான நோக்கமாக இருப்பது.

1) வங்கிகளின் வட்டி வீதத்தை நிலையாகப் பேணல்.
2) உள்நாட்டு பொருளாதாரத்தின் விலைமட்டத்தை நிலையாக பேணிச் செல்லல்.
3) அரசாங்க சேவைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லல்.
4) பொருளாதாரத்தில் புழக்கத்திலுள்ள பண அளவினைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
5) நாட்டின் பொருளாதார நிலைமையை ஸ்திரமாகப் பேணல். (…….)



kalvi.lk

14. நியாயமற்ற வியாபார நடைமுறைகளுக்கெதிராக நுகர்வோர்களைப் பாதுகாப்பதற்கும் நுகர்வோரின் உரிமைகளுக்கு உரிய மதிப்பளிப்பதை உறுதிப்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்ட அமைப்பு பின்வருவனவற்றுள் எது?
1) மத்திய சுற்றாடல் அதிகார சபை
2) இலங்கை தரக்கட்டளைகள் பணியகம்
3) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை
4) அளவை நிறுவை தரநியமச் சேவைத் திணைக்களம்
5) தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (…….)

15. பொருள் ஒன்றினை கொள்வனவு செய்வதற்கான கொள்வனவுத் தீர்மானத்தினை மேற்கொள்ளும் போது நுகர்வோர் கருத்தில் கொள்ளும் மிகப்பிரதான காரணி யாது?
1) தேவையும் விருப்பமும்
2) விலையும் தரமும்
3) பாதுகாப்பும், நீடித்தவாழ்வும்
4) சமூக அந்தஸ்தும், பழக்கவழக்கமும்
5) வருமானமும், கவர்ச்சியும் (…….)

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

Education கல்வி அத்யாபன

16. (அ) மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்கு சந்தைக்கு முன்வைக்கப்படும் எதுவும் ………………………………….. எனக் கருதப்படுவதுடன் இவற்றின் பரிமாற்றம் இடம்பெறுவதான நிலைமை……………………….. எனக் கருதப்படுவதுண்டு

(ஆ) வணிகங்களினால் உற்பத்தி செய்து வழங்கப்படும் பொருட்களின் இருவகைகளும்……………………… …………..…, ………………………………… என இருவகைப்படுத்தப்படுவதுண்டு

17. (அ) உற்பத்திப் பொருட்களுக்கான “சேர்க்கப்பட்ட பெறுமதி” என்பதனை மதிப்பிடும் போது ………………………………பெறுமதியும், …………………… பெறுமதியும் கவனத்தில் கொள்ளப்படுவதுண்டு

(ஆ) ……………….……………உற்பத்தியில் கிடைக்கும் வளங்கள் ………….……………. உற்பத்தியில் உள்ளீடுகளாக பயன்படுத்தப்படுவதுண்டு



kalvi.lk

18. (அ) புத்துருவாக்கங்களின் அறிமுகம் …………………………………… நிலைபேறான அபிவிருத்தியாக கருதப்படுகையில், கழிவுப்பொருள் முகாமைத்துவம் ………………………… நிலைபேறான அபிவிருத்தியாக கருதப்படுவதுண்டு

(ஆ) அரசின் பொருளாதார நோக்கமாகிய நிலைப்புத்தன்மை ……………………………, ……………………… என இரு வகைப்படுத்தப்படுவதுண்டு

19. (அ) உற்பத்தி வரியும், சுங்கவரியும்…………………… வரிவகைகளாக கருதப்படுகையில், கம்பனி வரியும் மூலதன இலாப வரியும்……………………. வரிவகைகளாக கருதப்படுவதுண்டு

(ஆ) திறந்த சந்தை நடவடிக்கையில் மத்திய வங்கி ……………………..,………………… ஆகிய பிணைப்பத்திரங்களை வணிக வங்கிகளினுடாக பொதுமக்களுக்கு விற்பனை செய்வதுண்டு

20. (அ) உற்பத்திப்பொருளொன்றின் சுட்டுத்துண்டொன்றில் ஆகக்கூடிய சில்லறை விலையினை அழித்து மாற்றம் செய்யப்பட்டிருத்தல்……………………………………….உரிமை மீறலாக கருதப்படுகையில் பூச்சிக் கொல்லி கிருமி நாசினியினை உற்பத்தி செய்வோர் அதன் பாவனை தொடர்பில் எச்சரிக்கையினை பிரசுரித்தல் ……………………………………….… உரிமையாககருதப்படுவதுண்டு

(ஆ) இலங்கையில் தரநியமக் குறியீடுகளை நடைமுறைப்படுத்துவதில் ………………….……….. செயற்பட்டு வரும் அதே வேளை, இதன் மூலம் …..……………………………. தரச்சான்று இலங்கை உற்பத்தியாளர் களுக்கு வழங்கப்படுவதுண்டு

❖ ***21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.***

21. வணிகமொன்றுக்கு தேவைப்படும் பிரதான வளங்கள் நான்கினைப் பெயரிடுக.

i. ……………………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………………

iii. ……………………………………………………………………………………………

iv. ……………………………………………………………………………………………



kalvi.lk

22. வணிகப்பரம்பலின் நான்கு படிமுறைகளினை வரிசைக் கிரமமாக குறிப்பிடுக.

i. ..............................................................................................................................

ii. ..............................................................................................................................

iii. ..............................................................................................................................

iv. ..............................................................................................................................

23. அண்மிய சூழல் காரணிகளில் ஒன்றாகிய வாடிக்கையாளர் எவ்வாறு வணிகமொன்றுக்கு அச்சுறுத்தலாக அமைதல் கூடும் என்பதற்கு நான்கு உதாரணங்களைத் தருக.

i. ..............................................................................................................................

ii. ..............................................................................................................................

iii. ..............................................................................................................................

iv. ..............................................................................................................................

24. இறைக்கொள்கையினால் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் நான்கினைத் தருக.

i. ..............................................................................................................................


ii. ..............................................................................................................................

iii. ..............................................................................................................................

iv. ..............................................................................................................................

Education கல்வி அධ්‍යාපන


25. கழிவுப் பொருள் முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படும் பின்வரும் குறியீடுகளின் பெயரினை அருகே எழுதுக.

(i) 

..................................................

(ii) 

..................................................

(iii) 

..................................................

(iv) 

..................................................



kalvi.lk

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணை பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru
1st Term Examination - 2022

FWC

**வணிகக்கல்வி - II**
**Business Studies - II**

Three Hours
Gr. 12 (2023)

32 | T | II

❖ ***அறிவுறுத்தல்கள்***

*ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.*

## பகுதி - I

*01)* வரையறுத்த அக்றோ புறெடெக்ற் கம்பனியானது (Agro product Company Ltd) தற்போது நாட்டில் நிலவி வரும் உணவுப் பொருட்களுக்கான நெருக்கடிக்கு தீர்வாக வீட்டுத்தோட்ட செய்கையினை ஊக்குவிக்கும் நோக்கில் குறுங்கால பயிரினங்களுக்கான விதைகள் மற்றும் பசளைகளினை விற்பனை செய்வதுடன், விற்பனைக்ககு பிந்திய சேவையாக ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது பெருமளவு ஊழியர் பணியாற்றும் இந்நிறுவனத்தில் பிரதேச ரீதியாக அவர்களுக்கிடையே பணிகள் பங்கிடப்பட்டுள்ளன.

I) கம்பனியின் வெளியீடுகளை கட்புலத்தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்துவதுடன், அவற்றுக்கு உதாரணங்கள் தருக.

II) மேலே கம்பனியின் வணிக நடவடிக்கைகள் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய விசைகள் நான்கினைக் குறிப்பிடுக.

III) அ) மேற்குறித்த கம்பனியினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் விற்பனைக்கு பிந்திய சேவைகள் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) மேற்குறித்த கம்பனி ஏன் இலாபத்தினை உழைக்க வேண்டும் என்பதற்கு இரு காரணங்களைத் தருக .

IV) ‘‘ஊழியர்களுக்கு பணிகள் பங்கீட்டு வழங்கப்பட்டுள்ளன’’ இதன் மூலம் நீர் கருதும் வணிக எண்ணக்கரு யாது எனக் குறிப்பிடுவதுடன், இதன் ஊடாக வணிகத்திற்கு கிடைக்கும் இரு நன்மைகளைத் தருக.

V) குறித்த வணிகத்தின் உருவாக்கம் மூலம், பிராந்தியத்திற்கு கிடைக்கும் சமூக பொருளாதார முக்கியத்துவங்கள் நான்கினைத் தருக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

02) தற்போதைய அதிகரித்த கோடை வெயில் காரணமாக இயற்கையான பழங்களைக் கொண்டு குளிர்பானங்களினை உற்பத்தி செய்யும் திருமதி அச்சனா என்பவர் கூறிய கருத்தாவது ‘‘எனது வணிக உற்பத்திகளுக்கு தற்போது அதிகரித்த கேள்வி நிலவுகின்றது எனினும் உள்ளீடுகளுக்கான விலை அதிகரிப்பினால் பானங்களின் விலைகளையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. அத்துடன் நவீன உற்பத்தி உபகரணங்களைப் பெற எனது முதலீட்டினை அதிகரிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது சந்தையில் வெளிநாட்டு பானங்களின் வருகையும், அரசின் சட்டதிட்ட நடைமுறைகளும் அச்சுறுத்தலாக மாறிவருகின்றது’’.



kalvi.lk

I) மேற்படி அச்சனாவின் வணிகத்தில் செல்வாக்கு செலுத்தும் பேரினச் சூழல் விசைகள் நான்கினை உதாரணத்துடன் குறிப்பிடுக

II) மேற்படி வணிகத்திற்கு புறச்சூழலினால் தோன்றியுள்ள நான்கு அச்சுறுத்தல்களினைக் குறிப்பிடுக.

III) மேற்படி வணிகத்தில் அக்கறைப்படும் இரு தரப்பினர்களைக் குறிப்பிடுவதுடன், அவர்கள் அக்கறைப்படுவதற்கான தலா இரு காரணங்களையும் தருக.

IV) கழிவுப் பொருள் முகாமைத்துவத்தில் மீள்பாவனை(Reuse) மீள்பதிலீடு(Replace) ஆகிய இரு எண்ணக்கருக்களை திருமதி அச்சனா எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதற்கு உதாரணங்கள் தருக.

V) திருமதி அச்சனா ஒழுக்கவிழுமிய கோவையொன்றினை கட்டியெழுப்ப முற்படுகையில் கவனத்தில் கொள்ளும் நான்கு காரணிகளைத் தருக. (5 x 2 = 10 புள்ளிகள்)

03) "ஒவ்வொரு நாட்டிலும், அரசுக்கும் அங்கு தொழிற்படும் வணிகங்களுக்கும் இடையில் பரஸ்பர உறவு நிலவுதல் இன்றியமையாத தொன்றாகும்."

I) அரசு இறைக்கொள்கையின் பிரகாரம் இறக்குமதி தீர்வையினை அதிகரிக்க எண்ணுகின்றது. இதனால் உள்ளூர் வணிகங்களுக்கு கிடைக்கும் இரு அனுகூலங்களையும், இரு பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

II) அதிகரித்துச் செல்லும் வாழ்க்கை செலவினை ஈடுசெய்வதற்காக அரசு ஊழியர்களுக்கு ஆகக்குறைந்த சம்பளத்தினை தீர்மானிக்கின்றதெனில் இதன் மூலம் ஊழியர்களுக்கு கிடைக்கும் நான்கு அனுகூலங்களைத் தருக.

III) வணிகங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் ஆதரவும் வழிகாட்டலும், வணிகரொருவருக்கு முக்கியமானதாக அமையும் எவையேனும் நான்கு வழிகளினைக் குறிப்பிடுக.

IV) அரசுக்கும், வணிகங்களுக்கும் இடையில் நிலவும் பரஸ்பர உறவின் முக்கியத்துவங்கள் நான்கினைத் தருக.

V) அரச இறைக்கொள்கையின் பகுதிகள் யாவற்றையும் பாய்ச்சல் கோட்டு வரைபடம் ஒன்றில் காட்டுக.

(5x2 = 10 புள்ளிகள்)

## பகுதி – II

04) I) பின்வரும் நியமங்களுக்கு பொருத்தமான சான்றுபடுத்தல் முறைகளை எழுதுக.

அ) ISO : 9001

ஆ) ISO : 14001

இ) ISO : 22000

ஈ) ISO : 26000

II) வருமானவரி மற்றும் பெறுமதிசேர்வரி ஆகியவற்றை ஒப்பிடுவதன் மூலம் அவற்றுக்கிடையிலான இரு வேறுபாடுகளினைத் தருக.

III) வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்ந்து கொள்வதற்கு அரசு பயன்படுத்தக்கூடிய எவையேனும் இரு தந்திரோபாயங்களைத் தருக.



kalvi.lk

IV) தற்போதைய பால் உற்பத்திப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டினை ஒரளவு குறைக்கும் நோக்குடன் பசும்பாலினை சேகரித்து போத்தலில் அடைத்து உற்பத்தி செய்யும் வணிகம் ஒன்றினை ஆரம்பித்துள்ள ஆகாஸ் என்ற வணிகர் நுகர்வோர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யும் இருவழிகளினை சுருக்கமாக விளக்குக.

V) மேற்படி ஆகாஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட வணிகத்தில் இடம்பெறும் நான்கு வணிகக்கருமங்களைக் குறிப்பிடுக.

05) I) வணிகச்சூழலை விளக்கிக்கொள்ளல் திட்டமிடலுக்கு மிகவும் முக்கியமானதாகும். பின்வரும் கூற்றுக்களுக்கு எதிரேயுள்ள இடைவெளிகளை SWOT மாதிரியில் காணக்கூடிய பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் ஆகியவற்றுள் பொருத்தமானதைப் பயன்படுத்தி நிரப்புக.

அ) வடக்கு மற்றும் கிழக்கில் காற்றாலை மூலமான மின் உற்பத்தி நிலையங்களை ஆரம்பித்தல். ………………..

ஆ) உமது வணிகம் அமைந்துள்ள பிரதேசத்தில் புதிய வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அதிகளவான வணிகங்கள் திட்டமிடுகின்றமை.

…………………

இ) Covid.19 தடுப்பூசியினை இதுவரை செலுத்தாத ஊழியர்கள் நிறுவனத்துள் 67%மாக காணப்படல்.

………………….

ஈ) உறுதியாக ஸ்தாபிக்கப்பட்ட கம்பனி வியாபாரச் சின்னம் காணப்படல்.

…………………….

II) சர்வதேச நுகர்வோர் அமைப்பினால் முன்வைக்கப்பட்ட நான்கு நுகர்வோர் உரிமைகளினைத் தருக.

III) கைத்தொழில் புரட்சியின் விளைவாக வணிகத்துறையில் ஏற்பட்ட பிரதான மாற்றங்கள் நான்கினைத்தருக

IV) "இன்று மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் சந்தை இடமும், சந்தை வெளியும் முக்கிய பங்கினை ஆற்றுகின்றன" இதன்படி சந்தை இடத்திற்கும், சந்தை வெளிக்கும் இடையிலான இரு ஒற்றுமைகளையும் இரு வேற்றுமைகளையும் குறிப்பிடுக.

V) அரசின் நிதிக் கொள்கை கருவியாகிய கடன் கட்டுப்பாடு என்பது இரு முறைகளில் மேற்கொள்ளப்படுவதுண்டு அவ்விரு முறைகளினையும் குறிப்பிடுக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

06) I) "வணிகங்கள் வேறுபட்ட பலநோக்கங்களை கொண்டிருத்தல் கூடும்" வணிகமொன்று கொண்டிருக்கும் நான்கு வேறுபட்ட நோக்கங்களைத் தருக.

II) அரசின் வரியல்லாத வருமானங்களுக்கு நான்கு உதாரணங்கள் தருக.

III) எவையேனும் நான்கு நுகர்வோர் பொறுப்புக்களினை குறிப்பிடுக.

IV) அண்மைக்காலத்தில் நுகர்வோர் பாதுகாப்பின் முக்கியத்துவம் அதிகரித்துச் செல்வதற்குரிய இரு காரணங்களைத் தருக.

V) சந்தையில் பகுத்தறிவுள்ள நுகர்வோர் ஒருவர் நடந்து கொள்ளும் நான்கு முறைகளினைத் தருக

(5 x 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk